


ரத்த புற்றுநோய் மற்றும் ரத்தசோகை உள்ளிட்ட ரத்த சம்பந்தமான அனைத்து சிகிச்சையும் பெறும் வகையில், சென்னை மியாட் மருத்துவமனையில், புதிய மையம் திறக்கப்பட்டுள்ளது. இதில், பிரிட்டிஷ் துணை ஆணையர் மிக்னிதவர்னாகிஸ், முன்னாள் அமைச்சர் கெனீக் கிளார்க் மற்றும் மருத்துவமனையின் நிர்வாக இயக்குனர் மோகன்தாஸ், இணை நிர்வாக இயக்குனர் பிரிதிவ் மோகன்தாஸ்.

# ரத்த புற்றுநோயை குணப்படுத்த புதிய சிகிச்சை

## 'மியாட்' மருத்துவமனை அறிமுகம்

சென்னை, மே 10-

இந்தியாவில் முதல் முறையாக, ரத்த புற்றுநோயை குணப்படுத்தக்கூடிய, 'ஹேப்லோ ஐடென்டிகல்' எனும் மாற்று சிகிச்சை முறையை மியாட் மருத்துவமனை அறிமுகப்படுத்தியுள்ளது.

இதுகுறித்து நேற்று நடந்த அறிமுக விழாவில், மியாட் மருத்துவமனை இணை நிர்வாக இயக்குனர் பிருதிவி மோகன்தாஸ் கூறியதாவது:

பொதுவாக, ரத்த புற்றுநோய் உடையவர்களுக்கு, 100 சதவீதம் பொருந்தக்கூடிய மாற்று ரத்தம் உடம்பில் சேர்த்தால் மட்டுமே குணப்படுத்த முடியும்.

அப்படி பொருந்தக்கூடிய ரத்தம் அளிப்போருக்காக, இந்தியாவில், 40 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் காத்துக் கொண்டிருக்கின்றனர். 50 சதவீதம் பொருந்தக்கூடிய இரத்தம் இருந்தால், 'ஹேப்லோ ஐடென்டிகல்' எனும் மாற்று சிகிச்சை மூலம், ரத்த புற்றுநோயை குணப்படுத்தலாம்.

இந்த சிகிச்சை முறையை, இந்தியாவில் முதல் முறையாக, மியாட் மருத்துவமனை அறிமுகப்படுத்தி உள்ளது. குறைந்த கட்டணத்தில், இந்த மாற்று சிகிச்சை அளிக்கப்படுகிறது.

மேலும், ரத்தவியல், ரத்த நோயியல், ரத்த புற்றுநோய், கதிர்வீச்சு புற்றுநோய் மற்றும் ஊட்டசத்து துறைகளை சார்ந்த நிபுணர்கள், லேப் டெக்னீஷியன்கள், பயிற்சி பெற்ற நர்சுகள், சிறப்பு ஆலோசகர்கள் கொண்ட குழு இந்த சிகிச்சையில் ஈடுபடுகிறது.

இவ்வாறு பிருதிவி மோகன்தாஸ் கூறினார்.

இந்த நிகழ்ச்சியில், மியாட் மருத்துவமனை நிர்வாக இயக்குனர் மோகன்தாஸ், பிரிட்டிஷ் துணை உயர் ஆணையர் மிக்னிதவர்னாகிஸ், பிரிட்டிஷ் அமைச்சர் மற்றும் சுகாதார தூதர் கெனீத்ஸ்கிளாக் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.